# பத்திரிக்கைச் செய்தி

## வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சம் வாங்கிய வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.ரவி, ஈரோடு மாவட்டம், பெருந்துரை தாலுகா, கருமண்டிசெல்லிபாளையம், சிதம்பரனார் தெருவில் வசித்து வருகிறார். புகார்தாரின் உறவினரான திரு.விஸ்வநாதன் என்பவருக்கு வாரிசு சான்றிதழ வேண்டி பெருந்துரை பிர்கா தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்துருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை உடுக்க திரு.அன்பரசன், வருவாய் ஆய்வாளர், பெருந்துரை பிர்கா, ஈரோடு மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.35,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று 09.02.2023ம் தேதி அன்று கூறியுள்ளார். தன்னால் அவ்வளவு பணம் லஞசமாக கொடுக்க முடியாது என்றதற்கு மேலும் திரு.அன்பரசன், வருவாய் ஆய்வாளர் ரூ.35,000/-ல் தனக்கு ரூ.8,000/-ம் மீதமுள்ள ரூ.27,000/-ம் வட்டாட்சியருக்கும் கொடுக்க உள்ளதாக புகார்தாரரிடம் கூறியுள்ளார். பின்னர் 14.02.2023 அன்று புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று கெட்டு கொண்டதுகிணங்க லஞ்ச பணத்தை ரூ.25,000/- மாக குறைத்துள்ளார். மேற்படி லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 14.02.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.அன்பரசன், வருவாய் ஆய்வாளர், பெருந்துரை பிர்கா, ஈரோடு மாவட்டம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.25,000/-யை தனது ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.அலெக்ஸாண்டர் என்பவர் மூலமாக புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.